[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. சட்டமுன்வடிவுகளின் நகல்கள் தாமதமாக வந்ததால், படித்து, பேசுவதற்கு நேரமில்லை எனத் தெரிவிக்கப்பட்ட கருத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடு)*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* I raise a point of order. *அரசினர் சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்வதற்கு முன்பாக, கொடுக்கப்பட்டிருக்கிற சட்டமே—* Bill *எங்களுக்கு* circulate *ஆகவில்லை. நான் என்னுடைய கட்சித் தோழர்களிடத்திலே எல்லாம் விசாரித்தேன். அவர்களுக்கும்* circulate *ஆகவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அவை கடைசியாகத்தான் எடுத்துக் கொள்ளப்படும்.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *கொஞ்சம் பேசுவதற்கு அனுமதி கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சொல்வது என்ன என்பது புரிகிறது.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: On behalf of the Communist Party of India (Marxist) *நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அதாவது, இன்றைக்கு அறிமுகம் செய்யப்படுகிற 7 சட்டங்களும் மிக முக்கியமான சட்டங்கள். மக்களுடைய வாழ்வோடு இன்றியமையாத ரிலேஷன்ஸ் இருக்கிற சட்டங்கள். இந்தச் சட்டங்கள் இன்றைக்குக் காலையில் 8 மணிக்குத்தான் எங்களுக்கு சர்வ் பண்ணப்பட்டது. அவற்றைப் படிப்பதற்கான நேரம் இல்லை. அதிலே பல விஷயங்களில்* financial implications *இருக்கின்றன. நிலச் சீர்திருத்தங்கள்கூட கொண்டு வரப்படுகின்றன. ஏற்கெனவே இருக்கிற* Land Ceiling Act-*ஐ எல்லாம் பார்த்து, அதுசம்பந்தமாகக் கருத்துகளைச் சொல்ல வேண்டும். அதற்கான வாய்ப்புகள் இல்லாமல், இன்றைக்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு அஜெண்டாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்டு) சார்பிலே என்னுடைய வேண்டுகோள்*

என்னவென்றால், இன்றைக்கு அறிமுகம் செய்யப்படுகிற சட்டங்களை விவாதிப்பதற்கு இன்னொரு நாள், அதாவது அடுத்த திங்கட்கிழமை அல்லது ஒரு short interval-ல் சபையைக் கூட்டி, ஒன்றோ, இரண்டோ நாட்களில் இந்த மாதிரியுள்ள சட்டங்கள்மீது எங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்புத் தர வேண்டும். வாய்ப்புத் தராமல்—உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது; நீங்கள் நிறைவேற்றலாம். அது வேறு விஷயம். ஆனாலும்—எங்களுக்குள்ள கருத்துகளை நாங்கள் சொல்ல வேண்டும் அல்லவா? அந்த....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. உட்காருங்கள். சொல்லிவிட்டீர்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: We are also representing the...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது, சட்டமுன்வடிவு என்பது அவசரத்திற்காகத்தான் கொண்டு வரக்கூடியது. (குறுக்கீடு) இல்லை. சட்டமுன்வடிவுகள் என்ன என்பது, உங்களுக்கு 8 மணிக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன என்பது தெரியும். அதைப் புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் உங்களுக்கு நிச்சயமாக உண்டு. (குறுக்கீடு) இல்லை. அதுபற்றி உங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்குத் தாராளமாக வாய்ப்பு இருக்கிறது. அந்தச் சட்டத்தின் மீது உங்களுடைய கருத்தைச் சொல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அவற்றைப் பதிவு செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. இப்போது அறிமுகம்தான். உட்காருங்கள்.

திரு. கே.சி. கருணாகரன்: அதாவது, இந்தச் சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்வதற்கு...

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டத்தினுடைய பாலிசி என்ன என்பதை—if at all you have got any objection to raise in regard to policy, you are at liberty. கொள்கை அடிப்படையில் எந்தெந்த மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றனவோ, அவற்றை நீங்கள் ரெக்கார்டு செய்யலாம். (குறுக்கீடு) நீங்கள் ரெக்கார்டு செய்யலாம்; அவைக் குறிப்பில் பதிவாக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொல்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அதாவது, சட்டங்கள் எந்த விதியின் மீது, என்ன என்பதைப் பார்க்க வேண்டாமா? அந்த விதிகளின்

மேலே இருக்கிற கருத்துகளைச் சொல்ல வேண்டாமா? வெறும் பாலிசி மட்டும் இல்லையே! சட்டம் என்று சொல்கிற நேரத்திலே, சட்டத்தின், விதியின்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *8 மணிக்கு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதுபற்றிய உங்களுடைய கருத்தைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

3. சட்டமுன்வடிவுகளின் நகல்கள் தாமதமாக வந்ததால், படித்து, பேசுவதற்கு நேரமில்லை எனத் தெரிவிக்கப் பட்ட கருத்து—தொடர்ச்சி

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: Honourable Speaker Sir, even without circulating the Bill, how can it be moved?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, சர்குலேட் செய்தாகிவிட்டது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, It is absolutely wrong to say that the Bill is not circulated. Bills have been already circulated on time.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று இரவே கொடுக்கப்பட்டுவிட்டது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இல்லை, கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. கிடைக்கவில்லை என்றால் என்னவென்று கேளுங்கள்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(அ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு, 2003—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.